# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
ஆடி 10
ஷஃபா 19
புதன் (26-7-1978)
நிருவியது 1947
புத்தகம் 32
இதழ் 16

விலை சதம் 35


## கோப்பாய்க்கோமகன் கால்பதிந்த மண்ணிலே

# கொள்கை வீரர்களின் மாநாடு!

## தாயகத்தின் அடிமைத் தளை நொறுக்கும் தமிழர் விடுதலை இயக்கத்தின் பாடி வீடு!

## ஆவரங்கால் நோக்கி அலைகடலெனத் திரள்வீர்! ஆவேச முழக்கோடு ஆர்த்தெழுந்து வருவீர்!

"தமிழினத்தின் அடிமைத்தளையறுத்திட — இனவிடுதலை பெற்றிடப் போராடுவது — இனத்துக்காகக் குரல்கொடுப்பது தேசத்துரோகமென்று கூறப்படுமானல் — அவ்வாறு சட்டம் கொண்டுவரப்படுமானல் — அத்தேசத்துரோகத்தை நான் செய்து தூக்குமேடையேறவும் தயாராக இருக்கிறேன். எனது இனம் ஒவ்வொரு திருப்பத்திலும் இழித்துப்பழித்து சீரழிக்கப்படுவதைவிட, உரிமைக்குப் போராடி தூக்குமேடை ஏறுவதை நான் விரும்புகிறேன்'' என்று சிங்களப் பாராளுமன்றத்தில் அன்ருெரு நாள் சிம்மம் போலக் கர்ச்சித்தவர் கோப்பாய்க் கோமான் தியாக மாமலை அமரர் வன்னியசிங்கம் அவர்கள்.

அத்தகைய கொள்கைத் தங்கம் — இனவிடுதலை உணர்வின் வித்தாக விளங்கிய அமரர் வன்னியனார் ஈராறு ஆண்டுகளாய் பிரதிநிதித்துவம் வகித்த கோப்பாய்த் தொகுதியிலே — அமரர் வன்னியனாரின் புனிதக் கால்கள் பதிந்த புனித பூமியிலே — தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாடு இந்தவார இறுதியில் (29,30) ஆவரங்காலில் கூடுகிறது.

## சுயநிர்ணய உரிமை ஏன் தர மாட்டேன் என்ருர் அன்று! ஈழத் தமிழினத்துக்கு சுருக்குக் கயிற்றை நீட்டுகிருர் இன்று!

## இனியும் பொறுப்பதில்லை! எழுந்துவா தமிழா! விடுதலைக்குவழிகாண்போம்! வீணரைப் புறங்காண்போம்!

ஆம், தமிழினத்தின் வாழ்வில் நெருக்கடியும் சோதனைகளும் நிறைந்துவரும் ஒரு சந்தர்ப்பத்தில்—புதிய அரசியலமைப்பு தமிழனைப் புதைகுழிக்கு அனுப்புவதற்காக நிறைவேற்றப்படவிருக்கும் இத் தருணத்தில் —தமிழர் விடுதலை இயக்கமாம் கூட்டணியின் மாநாடு கூடுகிறது — கோப்பாய்த் தொகுதியில், ஆவரங்காலில்!

1976ம் ஆண்டு மே 14ம் நாள் வட்டுக்கோட்டையிலே கூடிய கூட்டணியின் முதலாவது மாநாட்டிற்கும் இப்போது கூட விருக்கும் கூட்டணியின் இரண்டாவது மாநாட்டுக்கு மிடையே ஏறத்தாழ இரண்டாண்டுகள் பறந்தோடிவிட்டன!

தமிழர் விடுதலைக்கூட்டணியின் முடிந்த முடிபாக— மாற்ற முடியாத இலட்சியமாக 'சுதந்திரத்தமிழ்ஈழம்' எனும் இலட்சியம் பிரகடனப்படுத்தப்பட்ட வரலாற்றுச் சிறப்பு வட்டுக்கோட்டை மாநாட்டுக்கே யுரியது.

அந்த மாநாட்டின் பின் நாம் நடந்துவந்த பாதையில் பல்வேறு சோதனைகளும், வேதனைகளும் மலை போலக் குறுக்கிட்டன! என்ருலும், கொள்கையிலிருந்து வழுவாது — உறுதிதளராது கூட்டணி வெற்றிப்பாதையிலே நடைபோட்டுவருகிறது!

முந்திய அரசாங்கம் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தையடுத்து அவசரகால விதிகளின் கீழ் பிரகடனப்படுத்திய பிரிவினைத் தடைச் சட்டத்தை தமிழர் விடுதலைக்கூட்டணி முறியடித்தது. இதன் பேரில் திருவாளர்கள் அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், க. துரைரத்தினம், பண்டிதர் இரத்தினம் ஆகியோருக்கு எதிராகத் தொடரப்பட்ட 'ட்ரயல்—அற்—பார்' வழக்கும் தந்தை செல்வா தலைமையில் தமிழ்த்தலைவர் ஜீ. ஜீ. அமரர் திருச்செல்வம் ஆகியோருட்பட 67சட்டமாமேதைகளைக்கொண்ட குழுவின் சட்டவாதத்திஞல் முறியடிக்கப்பட்டது.

இந்த மகிழ்ச்சியையடுத்து தமிழர்கள் கண்ணீர்விடும் நிகழ்ச்சிகள் அடுத்தடுத்து நிகழ்ந்தன. திருவாளர்கள் திருச்செல்வம், ஜீ. ஜீ. பொன்னம்பலம், தந்தை செல்வா ஆகிய பெருந்தலைவர்கள் அடுத்தடுத்து மறைந்தார்கள்!

இதையடுத்து பொதுத் தேர்தல் வந்தது. தமிழ்த் தலைவர்கள் உருவாக்கிய ஒற்றுமையை, கூட்டணியை சிதைத்திட முறித்திட பல்வேறு அழிவுசக்திகள் முயற்சித்தன. அதையெல்லாம் எதிர்த்து நின்று, கூட்டணியின் ஒற்றுமை நிலைநாட்டப்பட்டது.


1977 ஆடித்தேர்தலில் தமிழ் ஈழ மக்கள் அனைவரும் உள்ளத்தால் ஒன்றுபட்டு நின்று—ஒரே உருவத்தினராய்—தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தையும், இறைமையையும்மீட்பதையே தம் குறிக்கோளாகக் கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே தம் வாக்குகளை அளித்து—கூட்டணியை எதிர்த்து நின்ரோரின் இடுப்பொடித்து—பெருவெற்றி சேர்த்தனர். இன ஒற்றுமையும், அந்த ஒற்றுமையின் அடிப்படையில் தமிழ் ஈழத்தின் விடுதலையுமே தமிழ் ஈழமக்களின் ஒரே இலட்சியம் என்பதை ஆடிப் பொதுத் தேர்தல் அறுதியிட்டுரைத்தது!

பொதுத்தேர்தலில் கூட்டணி வெற்றிபெற்று சிறீலங்காதேசிய பேரவையின் எதிர்க்கட்சியென்ற நிலையை எய்திவிட்ட மகிழ்ச்சியையடுத்து மீண்டும் கண்ணீர், துன்பம்!

ஆம், 1977 ஆவணிக் கலவரத்தின்போது தமிழ் சமுதாயம் அடைந்த கொடுமைகள், பட்ட துன்பங்கள், காலாதி காலத்துக்கும் மறக்க முடியாதவை!

இதையடுத்து, இதோ வருகிறது, அதோவருகிறது என்று எதிர்பார்க்கப்பட்ட ஜே. ஆரின் புதிய அரசியல் சட்டமும் இப்போது வந்துவிட்டது.

4ம் பக்கம் பார்க்க




### சுதந்திரன் மாநாட்டுச் சிறப்பு மலர்

கோப்பாய்த் தொகுதியில் நடைபெறும் கூட்டணியின் இரண்டாவது தேசியமாநாட்டையொட்டி 30-7-78 சுதந்திரன் அதிக பக்கங்களுடன், மாநாட்டு சிறப்பு மலராக வெளிவருகிறது.

இதன்விலை பிரதியொன்று ஒரு ரூபா மட்டுமே

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பெருந் தலைவர்களின் தெளிவான சிந்தனையில்

# முகிழ்த்தது தமிழீழ இலட்சியம்!

## அதை வென்றெடுக்கும் திட்டங்களை கோப்பாய் மாநாடு தீட்டட்டும்!

தமிழ்த் தேசியம் வகுப்புவாதம் ஆகாது. ஆயின், சிங்கள வகுப்புவாதத்தின் நெருக்குதலில் இருந்தும், தற்காத்துக்கொள்ளும் எத்தனமாகவே அது முளைவிட்டதென்பது மறுக்கமுடியாத உண்மை.

தமிழ்ப்பேசும் மக்களின் மரபுவழித் தாயகமான தமிழ் ஈழத்தில்தானும் தமிழ் மக்களைத் தமது பாரம்பரியங்களையும், தனித்துவத்தையும் பேணிக் காத்துக்கொள்ள அனுமதிப்பதில்லையென்ற சிங்கள வகுப்புவாதத்தின் இனவொழிப்புத் திட்டமே இத்தீவில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டங்கள் அன்றி வேறல்ல:

இலங்கைத்தீவையன்றி வேறொரு தாயகத்தைஅறியமாட்டாத மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை பிடுங்கப்பட்டதென்றால்; அதன்மேல் அதே மலையக தமிழ்தொழிலாளர்களின் குடிப்பெருக்கத்தை மட்டும் கணிப்பில் எடுத்து சிங்கள மக்களின் பாராளுமன்றப்பிரதிநிதித்துவத்தை அவர்களது விகிதாசாரத்துக்குப் பன்மடங்கு அதிகமாக உயர்த்தியது இலங்கைத் தீவைச் சிங்கள மக்களுக்கு மட்டும் தனி உடமையாக்கும் நடவடிக்கையின் முதற்படியே!

நான்கு மதங்களைக் கொண்ட இரு இன மக்கள் வாழும் இலங்கைத் தீவில் பெளத்த மதத்தை அரசாங்க மதமாகவும், சிங்கள மொழியை தனி ஒரு உத்தியோக மொழியாகவும் மாற்றியமை, இலங்கைத் தீவில் உள்ள ஏனையோர் அனைவரையும் இரண்டாம் அந்தஸ்துள்ளவர்களாக மாற்றும் இனவொதுக்கல் நடவடிக்கையே!

ஆகவேதான் இலங்கைத் தீவின் வரலாற்றின் அடிப்படையில் காலாதிகாலமாக வரலாற்றில் போர்த்துக்கேயரின் வருகைமட்டும் மாட்சியுடன் திகழ்ந்த தமிழ் ஈழ அரசை மீட்பதும், புனரமைப்பதும் என்ற மாற்றமுடியாத, தீர்க்கமான முடிவுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி வந்தது. வட்டுக்கோட்டையில் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு மேற்கொண்ட முதற்படி முடிவே தற்போது வட்டுக்கோட்டைத் தீர்மானம் என அறியப்படுவது.

தமிழ் ஈழத்தை மீட்பது புனரமைப்பது என்ற விரிவான தீர்மானத்தை வட்டுக்கோட்டையில் கூடிய மாநாட்டின் பொதுக்கூட்டத்தில் பிரகடனப்படுத்தியதும், அவசரகாலச் சட்டத்தின்கீழ் அப்போதைய அரசு சம்பந்தப்பட்ட தீர்மானத்துக்கே தணிக்கை மூலம் தடைபோட முயன்றது. சம்பந்தப்பட்ட தீர்மானம் பத்திரிகைகளிலோ, வானொலிச் செய்திகளிலோ இடம் பெறாது தடுக்கும் நோக்குடன் நள்ளிரவில்தானே கசந் அறிவித்தல் மூலம் தடை விதித்திருந்தது,

தமிழ்ஈழத்தை மீட்பது; புனரமைப்பது எனத்தான் மேற்கொண்ட மாற்றமுடியாத இறுதித் தீர்மானத்தில் முன்வைத்த காலைப் பின்வைப்பதில்லையென்ற உறுதியுடன்; சம்பந்தப்பட்ட தணிக்கையை மீறுவதென்று த.வி.கூ. முடிவு செய்தது. அதன் பலாபலனாக தமிழ்த் தலைவர்கள் நால்வர் கைதுசெய்யப்பட்டதும், யூரிமார் இல்லாத விசேட நீதமன்றம் ஒன்றில் அவர்கள் தேசத்துரோக குற்றத்தைஎதிர்நோக்கவேண்டியேற்பட்டதும் தெரிந்ததே.

தமிழ்த் தலைவர்கள் சம்பந்தப்பட்ட வழக்கில்இன்று அமரர்களாகிவிட்ட தந்தை செல்வா, சட்ட மாமேதைகளான அமரர் ஜீ. ஜீ.பொன்னம்பலம், அமரர் திருச்செல்வம் போன்ற ஆறு இராணி அப்புக்காத்துக்களுடன் சட்டத் தரணிகள் பலர் ஏற்பட்டு வழக்குரைத்தது வரலாறு. மேற்படி வழக்கில் "அவசரகாலச் சட்டமே செல்லுபடியற்றதென்று வாதிட்டார் அமரர் ஜீ. ஜீ. அமரர் திருச்செல்வம் அவர்களோ போரில்போர்த்துக்கேயரிடம் இழந்த இறைமையை, அவர்களிடம் இருந்து ஒல்லாந்தரும் பின் பிரித்தானியரும் கைமாற்றுச அனுபவித்து, தற்போது சோல்பரி அரசமைப்புதூக்கியெறியப்பட்ட காரணத்தால்மீண்டும் தமிழ் ஈழம் பெற்றுவிட்டதென்றும், எப்படி சிங்கள மக்கள் தமது இறைமையை உபயோகித்து தமக்கென்று ஒரு அரசமைப்புத் திட்டத்தை யாத்தார்களோ அதே போன்று தமிழ்ஈழ மக்களும் தமக்கெனத் தனியான ஒரு அரசியல் யாப்பை ஏற்படுத்திக்கொள்வார்கள் என்றும் முரசு ஒலித்தார்.

அமரர் திருச்செல்வம் அவர்களது வாக்கைப் பொய்யாமொழி யாக்கும் பணியை தமிழ்ஈழ மக்கள் கடந்த பொதுத்தேர்தலில் தமிழ்ஈழத்தின் தேசியப் பேரவை உறுப்பினர்களிடம் ஒப்படைத்துள்ளனர். ஒரு தேசிய நிர்ணய சபையாக அமர்ந்து அதனை நிறைவேற்றி நடைமுறைப்படுத்தும் பொறுப்பு அவர்கள் தோள்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. அதனை அவர்கள் எப்படி முடிக்கப்போகிறார்கள் என்பதை எதிர்வரும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாடு கட்டியம் கூறவிருப்பது எதிர்பார்க்கப்பட்டதே.

த. வி. கூட்டணியைச் சரியாகப் புரிந்துகொள்ள மாட்டாது அல்லது புரிந்துகொண்டும் புரியாதது போன்று நடிக்கும் இன்டிப்பென்டன்ற் போன்ற ஆங்கில ஏடுகள் அரசமைப்புத் திட்டத்துக்கான தேசிய அரசுப்பேரவை விவாதங்களில் கலந்து கொள்ள மறுப்பதன் மூலம் இமாலயத்தவறு செய்யப் போவதாகக் பீற்றிக் கொள்ளுகின்றன அவற்றின் உண்மையான நோக்கம் யாதெனில் சம்பந்தப்பட்ட விவாதத்தில் த.வி.கூட்டணியைக் கலந்துகொள்ளச்செய்வதன் மூலம் தமிழ் ஈழ மக்களிடம் இன்று வரலாற்று ரீதியாகவும், சர்வதேசசட்ட ரீதியாகவும் வந்தடைந்துள்ள இறைமையை அடகு வைக்கும்படி செய்வதேயன்றி வேறல்ல;

அன்று அமரர் திரு. உரைத்தார். "புதிய அரசமைப்புத் திட்ட விவாதத்தில் தமிழ் மக்கள் பங்கு கொள்ளவில்லை; ஏற்றுக்கொள்ளவில்லை அந்த அரசமைப்புத் திட்டத்தை. மாருக காங்கேசன்துறை இடைத்தேர்தல் முடிவின்படி பெருப்பான்மை வாக்குகளால் நிராகரித்து விட்டார்கள். உங்கள் அரசமைப்புத் திட்டம் வரலாற்று ரீதியாகவோ, சட்ட ரீதியாகவோ அவர்களைக்கட்டுப்படுத்த முடியாது" என்பது அவர் முன்வைத்த வாதம். அவரது வாதத்துக்கு எதிரான தீர்ப்பு எதனையும் நீதிமன்றம்கூட அந்த வழக்கில் வழங்க முன்வரவில்லை. அவரது வாதம், சம்பந்தப்பட்டதீர்ப்பில் வார்த்தைக்கு வார்த்தை அப்படியே இடம் பெற்றுள்ளது.

இந்த அசைக்க முடியாத சாதகமான நிலையை தமிழ் ஈழத்திடம் இருந்து பறிமுதல் செய்வதற்கான பசப்பு வார்த்தைகளே அரசமைப்புத்திட்டதிருத்தக்குழுவில் இடம்பெறுங்கள், விவாதத்தில் கலந்து கொள்ளுங்கள் என்று விடுக்கப்படும் அழைப்புக்கள். உண்மையான மனமாற்றம் இன்று பதவியில் அமர்ந்திருப்பவர்களிடம் ஏற்பட்டிருப்பின், சிங்களம் மட்டுமே நாட்டின் ஒரே உத்தியோக மொழியாக அமையும் என்றும் அதில் மாற்றம் இராதென்று குடியேற்றத் திட்டங்களைப் பொறுத்தமட்டில் மரபுவழி தாயகம் எதையும் தாம் ஏறுக் கொள்வதற்கு இல்லை' டி. எஸ். சேனநாயக்காவின் காணிப்பங்கீட்டுக் கொள்கையே தமது கொள்கை என்றும் கூறி இருப்பார்களா?

தமிழ் ஈழ மக்கள் இலங்கைத் தீவை இரு வேறு நாடுகளாகக் கருதுகிறார்கள் சட்ட ரீதியானதும், வரலாற்று ரீதியானதுமான இந்த உண்மை நிலைபெறடையத் தடையாக இருப்பது ஏகாதிபத்திய சிறீலங்காவின் இராணுவமும், காவல்துறை படைகளும் தான், இதனை இன்டிப்பென்டன்ற் போன்ற பத்திரிகைகள் ஏற்றுக்கொள்ள முன்வராவிட்டாலும் உலகப்பத்திரிகைகள் வெகு விரைவில் ஏற்றுக்கொள்ளவே செய்யும். அப்போது இன்று நபீபியாவை விட்டு. ரொடேசியாவை விட்டு. பாலஸ்தீனத்தை விட்டு ஆக்கிரமிப்பாளர்களான தென்னாபிரிக்கா, இஸ்ரேல் வெளியேற வேண்டும் என விடுக்கப்படும் அறைகூவலைப் போன்றே நாளை தமிழ்ஈழத்தில்ஆக்கிரமிப்பாளர்களாக விளங்கும் சிறீலங்காவும் வெளியேற வேண்டுமென்று உலகம் அறைகூவல் விடுக்கும். இதனை இன்டிப்பென்டன்ற் அறியாமல் இல்லை. அந்த நிலை வர அனுமதிக்கக் கூடாதென்ற அங்கலாய்ப்பால்தான் அது தமிழ் ஈழத்தின் தேசியப்பேரவை உறுப்பினர்களுக்கு மாயமானைக் காண்பித்து இதோ இதன் பின் போவாயானல் உனது சகல விருப்பங்களும் நிறைவேறும். அல்லாவிட்டால் நீ அனைத்தையும் இழந்துவிடப்போகிறாய். கடைசி பஸ்ஸையும் தவற விட்டு விடாதே என்ற உபதேசம் இதற்கு முன்பும் விடுக்கப்பட்டது. ஆனல் அதுவே கடைசி பஸ்ஸாக அமையாமல் 1960க்குப்பின்னும் பல கடைசி பஸ்கள் கானல் நீராகத் தோற்றம் தரவே செய்தன.

ஆவரங்காலில் கூடும் த. வி. கூ. இரண்டாவது தேசிய மாநாடு தமிழ் மக்கள் நடத்தி முடித்த சர்வஜன வாக்கெடுப்பின் முடிவை அதாவது ஒரு தேசிய நிர்ணய சபையை நிறுவும் பணியை எப்போது அரம்பிக்கவுள்ளது என விடுக்கவிருக்கும் அறிவிப்பை மிகுந்த ஆவலோடும், பக்தி வைராக்கியத்தோடு இங்குள்ள தமிழர் மட்டும் அல்ல உலகத் தமிழர்களே எதிர்நோக்கியுள்ளனர். தமிழன் உயர்வுக்காகத் தலை போவதென்றாலும் தயங்காத தமிழ் ஈழத்தின் தோற்றம் உலகப்படத்தில் அமையும் நன்னாளை அனைத்து உலகும் வரவேற்கும் என்பதில் ஐயம் இல்லை. உலகத்தில் கூலி தமிழன் என்ற நிலையை மாற்றி உலகத் தமிழனுக்காகக் குரல் கொடுக்க தமிழ் ஈழம் என்று ஒரு நாடு பிரகடனப்படுத்தப்பட்டுள்ள செய்தியைக் கேட்டு "செந்தமிழ் நாடென்னும்போதினிலே தேன் வந்து பாயுது காதினிலே, எந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்ற பாரதியின் பாடல் வரிகளுக்கு ஆவரங்காலில் கூடும் த.வி.கூ.யின் இரண்டாவது தேசிய மாநாடு செயல் வடிவம் தருமென எதிர்பார்ப்போம்.

—திரவியம்

# சிங்களக் குடியேற்றத்தை முறியடித்திட தேவநாயகம் போர்க்கொடி தூக்குவாரா?

12-7-78 சுதந்திரனில், அமைச்சர் தேவாவுக்கு பணிவான வேண்டுகோள்! என்ற தலைப்பில் கூறப்பட்டுள்ள கருத்துக்கு விளக்கம் கொடுத்து நிரூபிப்பது போல, 15-7-78 வீரகேசரியில் வெளியான தலையங்கச் செய்தி அமைந்திருந்தது, மதுறு ஓயாத்திட்டத்தின் மூலமோ அல்லது வேறெந்த குடியேற்றத்திட்டத்தின் மூலமோ கல்குடாத் தொகுதியில் சிங்களக் குடியேற்றம் நடைபெறமாட்டாது என்று ஆணித்தரமாகக்கூறிய அமைச்சர் 'தேவா'வின் கூற்றுக்கு ஆப்பு வைத்தாற்போல் அமைச்சர் காமினி திசாநாயக்கா கூறியிருக்கிறார். இதன்மர்மம் என்ன? தமிழர் நலனுக்கெதிரான சூழ்ச்சிகளும், திட்டங்களும் அமைச்சர் 'தேவா'வுக்குத் தெரியாமல் தீட்டப்படுகின்றனவா? அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தாக்குவதன் மூலம் தன் அரசியல் அந்தஸ்தைக் காப்பாற்ற முயன்ற திரு. தேவநாயகத்தின் தந்திரம் துரதிஷ்டவசமாகத் தகர்க்கப்பட்டிருக்கிறதா?

எதில் உண்மையிருப்பினும் ஒரு தெளிவான நிலைமட்டும் அப்பட்டமாகத் தெரிகிறது. தமிழனின் பிறந்த மண்ணிலேயே அவனைச்சிறுபான்மையாக்கி பெரும்பான்மைச் சமூகத்துடன் சங்கமிக்க வைப்பதற்கு அரசு எடுக்கின்ற பிரயத்தனங்களுக்கு முன்னல் திரு. தேவநாயகம் போன்ரோர் ஒரு வலுவிழந்த சக்தியாகவே விளங்குகிருர்கள். இதை மூடி மறைக்க விழுந்தாலும்மீசையில் மண் படவில்லையென்ற வறட்டு வைராக்கியத்தை நிலைப்படுத்த. திரு. தேவநாயகம் போன்ருேருக்கு, தமிழனின் உயிர்ச்சக்தியாக விளங்கும் தமிழர் விடுதலைக்கூட்டணியினரைச் சாடுவதே வழியாகப்படுகிறது போலும்!

கல்குடாத்தொகுதியில் எந்தத்திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும்நடைபெருது என்று தான் கூறிய கூற்றை அமைச்சர் 'தேவா' மனச்சாட்சியுடன் மதிப்பவராக விருந்தால் இனத்தின் பெயரால் கல்குடாத்தொகுதியில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்துக்கெதிராக அஞ்சாநெஞ்சுடன் போர்க்கொடி தூக்க முன்வருவாரா? கிழக்கு மாகாணத்தவரின் அரசியலை வடமாகாணத்தவர் நிர்ணயிக்க வேண்டியதில்லை என்று மாகாண பேதம் பேசி பெருமையுடன் தன்னை கிழக்கின் தந்தையென்று சிருஷ்டித்துக்கொள்ள விழையும் திரு. தேவநாயகம் அவர்களுக்கு உண்மையிலேயே கிழக்கு பெற்றெடுத்த வீரத்தமிழன் என்ற உணர்ச்சி, திராணியிருந்தால் அரசின் திட்டமிட்ட தமிழ்ப்பிரதேச ஆக்கிரமிப்புக்கெதிராக போராட தன் அரசியல் போக்கைத் திசை திருப்பி இந்நிலையிலாவது முன்வர வேண்டும். ஒவ்வொரு இன உணர்ச்சியுள்ள தமிழனும் இன்று அமைச்சர் 'தேவா' விடமிருந்து எதிர்பார்ப்பது இதுவே;

இந்நிலையில் அமைச்சர் தேவநாயகம், தமிழ்மக்களுக்கு, குறிப்பாக, கிழக்கு மாகாணத்தமிழருக்கு சில தெளிவான விளக்கங்கள் தரக்கடமைப்பட்டுள்ளார் என்று கருதுகிறேன்.

—மா. நல்லரட்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தம்மை முழுமையாக அர்ப்பணிக்காதவர்களால் தமிழ்ஈழத்தின் சுதந்திரத்தை மீட்க முடியாது!"

## கூட்டணி செயலகக் கருத்தரங்கில் வண. சர்வானந்தன் அடிகளார் அறிவுரை!

"சுவிட்சர்லாந்து தேசத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த ஓர் இளைஞர் யாழ் நகரைச் சுற்றிப்பார்வையிட விரும்பினர். வேறு வாகனங்களில் சென்றால் யாவற்றையும் அவதானிக்கமுடியாது என்று அவர் கூறியதால் சைக்கிளில் யாழ். நகரை அவருக்குச் சுற்றிக் காண்பித்தேன். நகர் வலம் புறப்படுமுன் தமிழ் ஈழ விடுதலைக்கு ஆதரவான கருத்துக்களைப் பரிமாறிய அந்த சுவிட்ஸர்லாந்து இளைஞன் யாழ் நகரை சுற்றிப் பார்வையிட்டதைத் தொடர்ந்து வெளியிட்ட கருத்து எனக்குப் பெரும் அதிர்ச்சியை உண்டுபண்ணியதோடு என்னை வெட்கமடையவும் செய்தது.

"அந்த சுவிட்சர்லாந்து வாலிபன் கூறியதுஇதுதான். இங்கு தமிழ் ஈழத்துக்கு சுதந்திரம் கோருகிறீர்கள். உங்கள் சுதந்திரக் கோரிக்கையை உலகப் பத்திரிகைகளும் பெரிதுபடுத்திப் பிரமாதப்படுத்துகின்றன. ஆகவே உங்கள் நாட்டைப் பார்க்கவேண்டும். சுதந்திரத்துக்காக தமிழ் மக்கள் எப்படி உழைக்கிறார்கள் என்பதை நேரில் அவதானிக்கவேண்டும் என்ற ஆவலால் உந்தப்பட்டே இங்கு வந்தேன். தமிழ் ஈழத்தின் சுதந்திரத்துக்கு தமிழ் மக்கள் எந்தவிலையையும் தரத் தயாராக இல்லை. தமிழ் ஈழ விடுதலை பற்றிச் சிந்திக்க வேண்டிய இளைஞர்களோ திரைப்பட மாளிகைகளை முற்றுக்கையிட்டு நிற்கக் காண்கிறேன். உங்களுக்கு ஏன் சுதந்திரம் என்று அவர் கேட்டபோது எனது அரையில் சேலை நழுவுவது போன்ற கூச்சம் எனக்கு ஏற்பட்டது, நான் வாய்மூடி மௌனியானேன்."

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப் பணியகத்தில் நிகழ்ந்த வாராந்தக் கருத்தரங்கில் வண. சர்வானந்த அடிகளார் கலந்து கொண்டு "வீர சுதந்திரம் வேண்டி நின்றார் வேறொன்று கொள்வாரோ" என்ற தலைப்பில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கருத்தரங்கிற்கு முன்னாள் மாநகர முதல்வர் டாக்டர் ச. அ. தருமலிங்கம் தலைமை வகித்தார்.

வங்களாதேசத்தின் விடுதலைப் போராட்டகாலத்தில் கட்டுப்பாடு, தியாகம் ஒழுக்கம் மிகுந்த இளைஞர் இயக்கமான முக்திபாகினி ஒன்றுக்குத்தான் வங்கபந்து முஜிபுர் ரகுமான் உட்பட தலைவர்கள் யாவரும் பயப்பட்டார்கள். அந்த இளைஞர் இயக்கம் விளைத்த வீரமும் செய்த தியாகமும் உலக வரலாற்றில் மறக்க முடியாதது. அந்த இளைஞர் இயக்கத்தின் தலைவன் யாரென்பது இன்றளவும் எவருக்கும் தெரியாது. பெயர் அறியப்படாத அந்தத் தலைவனின் குரலுக்கு யாவரும் செவிகொடுத்தார்கள். முக்திபாகினியின் தலைவனது குரல் அசரீரியாகவே பங்களாதேஷில் ஒலித்துக்கொண்டிருந்தது. பூராயம் அறியும் மனப்பாங்கு அற்ற முக்திபாகினி இளைஞர் இயக்க உறுப்பினர்கள் செய் அல்லது செத்துமடி என்ற தாரக மந்திரத்துக்கு அமைய தலைவன் குரலுக்குப் பணிந்து போராடிக் கொண்டே இருந்தார்கள். தலைவன் யார் என்ற கேள்வி எழவில்லை. தலைவனை அறியும் முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. இத்தனைக்கும் முக்திபாகினித் தலைவன் பிறப்பித்த கட்டளையோ" "அங்கே செல், முன்னேறு, பின் வாங்காதே." என்பதே!

இலட்சியத்திற்காக தம்மை அர்ப்பணிக்கக்கூடிய பொறுக்கி எடுத்த ஒரு சிலருடன்தான் ஒரு தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவன் ஆலோசிப்பானேயன்றி இலட்சக்கணக்காக மக்கள் கூடுகின்ற பொதுக் கூட்டங்களில் அல்ல.

பரீட்சைக்குப் படிக்கும் ஒரு மாணவன் சில கட்டுப்பாடுகளைத் தனக்குத்தானே விதித்துக் கொண்டு மற்ற இன்பங்களைத் துறந்து படிப்பில் மட்டுமே கவனம் செலுத்துகிறான்.

குத்துச் சண்டையில் ஈடுபட விரும்புபவன் அதற்காகத் தனது உடம்பைத் தயார் செய்கிறான். அளவோடு உணவு அருந்துகிறான். தேவையான உடற் பயிற்சிகளை மேற்கொள்ளுகிறான்; போதிய உறக்கத்தைப் பெறும் பொருட்டு அனாவசியமான களியாட்டங்களைத் தவிர்க்கிறான். உடலுக்குத் தீங்குண்டாக்கும் தீய பழக்கங்களை விட்டுவிடுகிறான்.

இவர்கள் தமது இலட்சியக் கனவுகளை நனவாக்கும் பொருட்டு பல காரியங்களைத் தியாகம் செய்கிறார்கள், பல கட்டுப்பாடுகளைத் தமக்குத் தாமே விதித்து அதன்படி தமது வாழ்வை ஒழுங்குபடுத்திக் கொள்ளுகிறார்கள்

தமிழ்ஈழத்துக்கு வீர சுதந்திரம் வேண்டி நிற்கும் தமிழர்கள் இதில் ஏதாவது ஒரு நிலையில் இருக்கிறார்களா? பச்சைத் தண்ணியில் நிச்சயமாகப் பலகாரம் சுட முடியாது. வீரசுதந்திரம்வேண்டுமென்று வாய் வீரம் பேசினால் மட்டும் தமிழ் ஈழத்துக்குச் சுதந்திரம் வந்துவிடப் போவதில்லை.

சுதந்திரம் பெறவும் ஒரு தகுதி வேண்டும். சாத்வீகத்தின் மூலம் பாரதநாட்டுக்கு சுதந்திரம் பெற்றுத்தந்த மகாத்மா காந்தியடிகள் வசதியுள்ள செல்வந்த குடும்பத்தில் பிறந்தவர் லண்டன் சென்று பரிஸ்டர் பட்டம் பெற்றவர். தென்னாபிரிக்காவில் தன்னின மக்கள் இரண்டாந்தர மூன்றாந்தர பிரஜைகளாக பட்ட பாட்டைப் பார்க்க மனம் பொறுக்க மாட்டாதவராக பொது வாழ்வுக்கு தம்மை அர்ப்பணித்தார், அவரது இந்திய வருகையின் பின் தேசிய விடுதலை இயக்கமான காங்கிரஸ் கட்சியின் தலைமையை ஏற்றார். மக்களை சுதந்திரத்துக்கு தயார்படுத்துமுகமாக பல இயக்கங்களை நடப்பித்தார். அவர் மேற்கொண்ட கிராம யாத்திரைகள் தாம் எத்தனை தனிப்பட்ட சௌகரியங்களைத் துறந்து சுதந்திர இயக்கத் தலைவர்கள் ஆச்சிரம வாழ்க்கையை மேற்கொள்ளும்படி வற்புறுத்தினார். தாமும் ஆச்சிரமவாசியாகமாறினார், சுதேசி இயக்கம் கண்டார், விதேசி உற்பத்திகளைப் பகிஷ்கரிக்கும் மனப்பக்குவத்தை மக்கள் மனதில் நிலைபெறச் செய்தார். இறுதியில் 'வெள்ளையனே வெளியேறு" என்று காந்தி குரல் எழுப்பினார். முழு இந்தியாவும் அதே குரலை ஒலித்தபடி அவர்பின் சென்றது. நம்மால்—தமிழ் ஈழத்தால் அப்படிச் செய்ய முடியுமா?

தென் இலங்கையில் இருந்து மா, சீனி, வரத்தடைவந்தால் அதனை எதிர்நின்று சமாளிக்க நாம் தயாராக உள்ளோமா? இராணுவ வீரர் பெண்களிடம் வம்பு செய்யும் போது அவர்களைப் பாதுகாப்பதற்காக தம்மை அவர்களுக்குப் பதிலாக ஒப்படைக்க தமதுமார்பை துப்பாக்கிகளுக்கு முன்பாகத் திறந்து காட்ட எந்த இளைஞனும் முன்வர ஆயத்தமாக உள்ளானா?

கிடைக்கப் போகும் சுதந்திரம் பூரணத்துவம் உள்ளதாக அமைய தமிழ்ஈழம் தனது சுயதேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக அமைய வேண்டும்.

பிடல்காஸ்ரோ, சேகுவேரா, போன்ற விடுதலை வீரர்கள் நகர வாழ்க்கையை துறந்தார்கள். தென்னிலங்கை வாழ் தமிழர் மனநிலை என்ன? பிடல்கஸ்ரோ, சேகுவேரா இருவருமே அஸ்துமா நோயாளிகள், நோயை பெரிதுபடுத்தினார்கள் அல்ல, நாட்டு விடுதலைக்கு தம்மை முழுமையாக அர்ப்பணித்தார்கள், "சொந்தம் பந்தங்களை மறந்து விடு. சுதந்திரம் உனக்கல்ல, உன் பிள்ளைகளுக்கே. உன்னை நாட்டுக்கு அர்ப்பணி" என்று சங்கநாதம் செய்தார்கள்,

"நாடுஉனக்கு என்ன செய்தது என்று கேளாதே நீ நாட்டுக்கு என்னசெய்தாய்!" என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எப் கெனடி கேட்டார்

இவ்வீரர்களின் வாழ்க்கை தமிழ்த்தேசிய விடுதலை வீரர்களுக்குப் பாடமாக அமைய வேண்டும் அப்போதுதான் சுதந்திரத்துக்கு தமிழ்ஈழம் தகுதி பெறும் வீரசுதந்திரம் வேண்டி நின்றோர் சுதந்திரத்தை விடுத்து வேறெதனையும் அப்போது கண்ணெடுத்தும் பாரார்"

## நாம் செய்த தவறென்ன

இறைக்குள்ளே நானிருந்து
சிந்தித்தேன் சில நொடிகள்
மறைக்காமல் என் மனதை
மற்றவர்க்குக் காட்டிடவே
திறக்கின்றேன் பேனவை
சிந்தனையில் சிலவரிகள்

பன்னி ரெண்டு தோழருடன்
பட்ட துன்பம் பலவுண்டு
பூட்டுகிறார் தனியறையில்
பூதமாய் எமை நினைத்து
தட்டுகிறார் இரவு பகல்
தப்பாமல் சிறைக்கதவை

கொட்டி என்றும் புலி என்றும்
கொட்டுகிறார் வார்த்தைகளை
கொட்டிகளோ நாம் அவர் மேல்
கொல்வதற்குப் பாய்ந்திடவே
எட்டியே நிற்கிறார் (ஏனோ)
எமைக் கண்டவுடன்

வேறு

குளிக்கவோ ஐந்து நொடி—கூடினால்
குட்டொன்று தலையில் மொட்டென்று பெட்டனல்
ஏன் புடைத்தீர் எனக் கேட்டால்
கொட்டியும் குளிக்குமோ என்கிறார்
தார்மீக ஆட்சியின் தண்டனையும் பலவகை
தடியர்களால் தமிழ் மக்கள் தாக்குண்டோர் பலர்
சட்டமிருக்கிறதாம் அது அதிர்ந்து பேசிடுதாம்
பேணிக்குள் சோற்றைப் போட்டு அரை வெட்டு
அதைத் தின்ற எங்களுக்கு வயிற்றுக்குத்து
கல்லுண்டு சோற்றிடையே அதனுள்ளும்
நெல்லுண்டு பல இனங்கள்.
வண்டுண்டு பலவகையும்
காலைவரும் பாணுக்குள்ளே,
பல்லுடையவரும் சிரட்டைத்துண்டுகள்
பாணுக்கான சம்பலுக்குள்
புல் பூண்டு நிறைந்திருக்கும்
பகல் பொழுதின் கீரைக்குள்,
சொல் இல்லை சிறைச்சாலை
சாப்பாட்டைச் சொல்வதற்கு
கேட்கின்றோம் நாம் செய்த தவறென்ன
ஊக்கமுடன் நாம் விவசாயம் செய்ததுவோ
நீதியின் பெயராலே நீண்ட பயணங்கள்
பாதியிலே தப்பிடாமல் பார்ப்பதற்கும் காவலர்கள்
வாதிப்பார் வழக்கறிஞர் பதில்சொல்வார்
பொலிசதிபர்
மீதியோ என்னவென்றால் மீண்டும் நாம்
சிறைக்குள்ளே
இடுக்கண் மிகு இவ்வுலகில் எமக்கின்னல்
சூழ்கையிலே
மிடுக்காக நடப்பதற்கு முடியாமல் நினைவுகையில்
இடுப் பொடிய அடித்த பின்னே இட்டாரே
சிறையதனில்
தடுப்பதற்கு யாருமில்லை தவிக்கின்றோம்
தனிமையிலே

—சிறைப்பறவை

## கோப்பாய் மாநாடு வெளிநாடுகள் அக்கறை!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாடு யூலை 29,30ம் திகதிகளில் கோப்பாயில் கூடுகிறதல்லவா, கோப்பாய் மாநாடு தமிழ்ஈழத்தை மீட்பது புனரமைப்பது என்ற வட்டுக்கோட்டைத் தீர்மானத்தையும், 1977 (பொதுத்தேர்தலில்) சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தமிழ் ஈழத் தேசிய மன்றத்தை அமைக்கும்படி மக்கள் பிறப்பித்த ஆணையையும் மாநாடு முன்னெடுத்துச் செல்லும் முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ளவிருப்பதால் மாநாட்டுத் தீர்மானங்களை [illegible] கொள்ள வேண்டுமென்பதில் உலகெங்கும் உள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் கருத்தாகவிருக்கின்றன;

எனவே மாநாட்டுத் தீர்மானங்கள் 24மணி நேரத்தில் உலகெங்கும் இயங்கும் தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களுக்கு கிடைக்கும்படி செய்ய விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகஅறியப்படுகிறது.

கோப்பாய் தேசியமாநாட்டின் அதிமுக்கியம் வாய்ந்த உத்தேச தேசிய மன்றம் அமைக்கும் தீர்மானத்தையும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரின் தலைமை உரையையும் உடனுக்குடன் பத்துக்கும் மேற்பட்ட உலக மொழிகளில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை மேற்படி இயக்கங்கள் மேற்கொண்டு வருவதாக அறியப்படுகிறது. தமிழ்நாடு, இங்கிலாந்து, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலுள்ள தமிழ் ஏடுகளும் உலகப் பத்திரிகைகளும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் தேசிய மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கு முக்கியம் தந்து செய்திகள் வெளியிட ஏற்பாடுகள் செய்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது. 

# தமிழ்ப்புலிகளை சங்காரம் செய்ய

# சிங்களச் சிங்கங்கள் தமிழ் படிக்கவேண்டுமாம்!

## கல்வியமைச்சர் கக்கிய இனவாதம்

சிங்களப்பாடசாலைகளில் சிங்கள மாணவர்கள் ஏன் தமிழை ஒரு பாடமாகப் படிக்கவேண்டும் என்பதற்கு கல்வியமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்தின காரணம்கூறியிருக்கிறார்.

"Today English Education is being improved and the Tamil language is taught in Sinhala schools and vice versa. For the suppression of 'Tigers' the 'Lions' should be well aquainted with their language" (Sun 21-7-78)

"இன்று ஆங்கிலக்கல்வி முன்னேறியுள்ளதுடன், சிங்களப்பாடசாலைகளில் தமிழ் போதிக்கப்படுகிறது, அதே போல தமிழ் பாடசாலைகளில் சிங்களம் போதிக்கப்படுகிறது.

"தமிழ்ப் புலிகளை சங்காரம் செய்வதற்காக புலிகளின் மொழியை சிங்களச் சிங்கங்கள் நன்கு அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்"

(சன் 21-7-78)

இதுதான் கல்வியமைச்சர் கூறிய காரணம்! சிங்களவர் தமிழ் படிப்பது தேசிய ஒற்றுமைக்காகவல்ல — தமிழர்களை மேலும்நசுக்குவதற்குத்தான் என்பது இப்போது புரிகிறதல்லவா?

## யாழ் நகரெங்கும் இன எழுச்சிக் கீதங்கள்

கோப்பாயில் இடம்பெறும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாடு யாழ் நகரில் ஏற்கனவே கலகலப்பை ஏற்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நினைவுபடுத்தும் வகையில் யாழ் பஸ் நிலயத்தின் முன்னுக அமைந்துள்ள வர்த்தக தாபனங்கள் தமிழ் உணர்ச்சி ததும்பும் இன வெழுச்சிப் பாடல்களை ஒலிபரப்பி வருகின்றன.

மாநாட்டின் ஆரம்பத்துக்கு முன்பே இவ் இன வெழுச்சி யாழ் குடாநாடு அடங்கலும் உள்ள ஏனைய வர்த்தர்கள்மட்டும்ஏழவிருக்கும் இன உணர்ச்சிப் பிரவாகத்துக்கு யாழ் பஸ்நிலைய வர்த்தகர்கள் நடவடிக்கை கட்டியங் கூறுவதாகஅமைந்திருப்பதாக பொதுமக்கள் பேசிக்கொள்கின்றனர்.

## ஜெயசேகரா பிணையில்விடுதலை

மாங்குளம் ரயில் துப்பாக்கிச்சூடு சம்பந்தமாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த கோப்ரல் ஜெயசேகரா, சட்ட மா அதிபரின் விசேட உத்தரவின் பேரிலேயே பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். உயர்நீதிமன்றம் இவரை விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளதாக 23-7-78 சுதந்திரனில் வெளியிடப்பட்ட செய்தி தவருனதாகும்.

## வெளிநாட்டு தமிழர் ஆர்வம்!

அமெரிக்காவிலும், கனடாவிலும் இயங்கிவரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் பத்திரிகைப் பத்தியிடங்களை விலைக்குப் பெற்று தற்போது இங்கு இடம்பெறும் சன்சோனி கமிஷன் விசாரணையில் தெரிவிக்கப்படும் சாட்சியங்களை நியுயோர்க் டைம்ஸ் பத்திரிகையின் ஞாயிறு இதழ்களில்தொடர்ந்து வெளியிட்டு வருவதாக நம்பகமாக அறியப்படுகிறது. பிரதி கிடைத்ததும் அதன் ஒளிப்படம் சுதந்திரனில் வெளியிடப்படும்.

சோசலிசக் குடியரசு நாடுகள்தாம் உலகப் பத்திரிகைகளில் இடத்துக்கு விலை கொடுத்துவாங்கி குடியரசுத் தலைவர்களின் தலைமைப் பேருரைகளை வெளியிடுவது வழக்கம்;

அமெரிக்காவிலும், கனடாவிலும் இயங்கிவரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் சோசலிச நாடுகளின் முன்மாதிரியைப் பின்பற்றி உடந்த 1977 ஆகஸ்ட்வன்செயல் நிகழ்ச்சிகளின்போது விசேட அனுபந்தம் ஒன்றையும் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைகளில் வெளியிட்டிருந்தார்களாம்.

கோப்பாயில் இடம் பெறவுள்ள தமிழர் விடுதலைக்கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் நிகழ்த்தப்படும் தலைமைப் பேருரையும் சோசலிசக் குடியரசு நாடுகளின் தலைவர்களது தலைமைப் பேருரைகளைப் போன்று உலகப் பத்திரிகை ஒன்றில் வெளியிடச் செய்ய வேண்டுமென்ற ஆவலுடன் அமெரிக்கா, கனடா நாடுகளில் இயங்கும் தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் சுறுசுறுப்புடன் இயங்கிவருவதாக அறியப்படுகிறது.

---

—1-ம் பக்கத் தொடர்

சிங்களமே ஆட்சிமொழி!
பௌத்தமே அரசமதம்!
ஒற்றையாட்சியே,
ஆட்சிமுறை!
சிங்கக்கொடியே
தேசியக்கொடி!
'நமோ நமோ' கீதமே
தேசிய கீதம்!

என்றெல்லாம் நம்மை நசுக்கும் சட்டங்களைக் கொண்ட புதிய அரசியலமைப்பு, இவற்றை யெல்லாம் விட தமிழ் மக்கள் 1977 ஆடிப்பொதுத்தேர்தலின்போது அளித்துள்ள ஜனநாயகத் தீர்ப்புக்கே சவால் விடுகிறது!

சிங்கள சிறீலங்காவிலிருந்து பிரிந்து, தமது இறைமையை பிரயோகித்து, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரத் தமிழ் ஈழ அரசை அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதே 1977 ஆடிப் பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் அளித்துள்ள ஒரேயொரு தெளிவான திட்டவட்டமான தீர்ப்பாகும்!

அந்தத் தீர்ப்பையே அலட்சியப்படுத்தி — ஜனநாயகத்தையே படுகுழிக்கு அனுப்புகிறது புதியஅரசியலமைப்பு!

உங்களுக்கு சுயநிர்ணய உரிமையை நான் ஏன் தரமாட்டேன் என்று எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கத்தைப்பார்த்துக் கேட்ட ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்று சுயநிர்ணய உரிமைக்குப் பதிலாக சுருக்குக் கயிற்றை நீட்டுகிறார்!

ஆம், புதிய அரசியலமைப்புக்கு எதிராகவோ அல்லது அதை திருத்தும்படியோ மாற்றும்படியோ, கோரினல்—அது தண்டனைக்குரிய குற்றமாம்! அதற்குத் தண்டனை என்ன தெரியுமா?

பத்தாண்டுச் சிறை!
சொத்துப்பறிமுதல்!
அபராதம்!

பாராளுமன்ற உறுப்புரிமை இழப்பு!

இப்படிப் பலப் பல! ஆம், விடுதலை இயக்கத்தை நோக்கி சவால்விடப்படுகிறது! 1977 பொதுத்தேர்தலில் தமிழர்கள் அளித்த ஜனநாயகத் தீர்ப்புக்கு சவால் விடப்படுகிறது; தமிழர் விடுதலைக் கூட்டணியிலுள்ள இலட்சியவாதிகளுக்கு, உண்மையான விடுதலை உள்ளம் கொண்டோருக்கு சவால் விடப்படுகிறது.

இந்த நிலையில்,—நெருக்கடியான காலகட்டத்தில்—இயக்கத்தின் புதிய தலைவராக நல்லூர் சிவாவும், செயலதிபராக நாவலர் அமிர் அவர்களும்—இந்த இரண்டு உறுதிமிக்க உள்ளங்களும் இணைந்து வழிநடத்தும் இயக்கத்தின் மாநாடு, கோப்பாய்த் தொகுதியிலே கூடுகிறது!

தமிழ் ஈழம் முழுவதுமே அங்கு திரள்கிறது!

இழப்பதற்கு ஒன்றுமில்லை—இனவிடுதலையே எம் இலட்சியம் என்று முழங்கும் தாவும் வேங்கைகளாக தமிழர்கள் கூடுகிறார்!

"இருப்பது ஒரு உயிர்தான்; அது போவப் போவதும் ஒரு தடவைதான்; இந்த உயிர் தமிழ் ஈழத்தாயகத்தின் விடுதலைக்காகப் போகட்டுமே!" என்று முழங்கும் தியாகி சிவகுமார் வழிவந்த இலட்சியக்காளைகள் ஆவரங்காலிலே கூடுகிறார்!

நாட்டு விடுதலைக்குப் போராட நாமும் தயாரெனக் கூவியபடி தமிழ் மகளிர் படை மாநாட்டை நோக்கி படையெடுக்கிறது!

திட்டங்கள் உருவாகவிருக்கின்றன —தமிழ் ஈழ விடுதலைக்கு!!

தமிழ் ஈழத்தேசிய மன்றம் உருவாகும் அந்தப் புனித நாள் எப்போதுஎன்று அறிவிக்கப்படவிருக்கிறது மாநாட்டில்!

தனியரசு இன்றேல் பிணமுரசு, விடுதலையின்றேல்வீரமரணம் என்று ஆர்ப்பரிக்கும் போர்க்காளைகள் அண்ணன் அமிரின் சுட்டுவிரல் ஆணைகேட்டிடக் கூடுகிறார் ஆவரங்காலில்!

தமிழினத்தின் சிந்தனைச் சுரங்கமாம் நமது சிந்தனைச் சிற்பி கதிரவேற்பிள்ளை அவர்கள் வரவேற்புக் குழுத்தலைவராக நின்று அனைவரையும் மாநாட்டுக்கு அழைக்கிறார்!

ஓயாதுபணியாற்றும் உண்மைத் தொண்டர் 'தமிழரசு' சின்னத்துரை வரவேற்புக் குழுச் செயலாளராக நின்று அனைவரையும் கனிந்துருகி அழைக்கிறார்!

எனவே, தமிழர்களே தமிழர்களே!

ஆவரங்கால்நோக்கி அலைகடலெனத் திரள்வீர்!

இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்குமெனமாற்றார் மருளும் வண்ணம் தமிழ்ப் படையே திரண்டுவா!

அடிமை விலங்கு பொடிபட, அருமைத் தமிழ் ஈழத்தின் விடுதலை முரசு முழக்க—ஆவரங்கால் நோக்கி, அணிவகுப்பீர்!

நம் குடும்பத் தலைவர்—[illegible] தினை உள்ளத்தில் தேக்கியபடி— மாநாட்டரங்கு நோக்கித் திரள்வீர்!

நினைவிருக்கட்டும் யூலை 29 30— சனி ஞாயிறு நாட்கள்!

தமிழ் ஈழம் முழுவதுமே ஆவரங்காலில் திரளட்டும்!

அங்கு அதிரும் விடுதலை முரசு, ஆளவந்தாரின் செவிப்பறையை கிழிக்கட்டும்!

வாழ்வு, அல்லது அழிவு இந்த இரண்டில் ஒன்று காண கோப்பாய் மாநாடு வழிகாணட்டும்!

## அமிர்தலிங்கம் வாழ்க்கை வரலாறு நூல் வெளியீட்டு விழா

நாக. சாந்தலிங்கம் எழுதிய "களம்பல கண்டகாளை தளபதி அமிர்தலிங்கம்"என்னும், தலைவர் அமிர்தலிங்கத்தின் வாழ்க்கை வரலாறு நூல் வெளியீட்டு விழா இன்று புதன் கிழமை (26-7-78) மாலை 6மணிக்கு புங்குடுதீவு பெருங்காடு கந்தசாமி கோவிலுக்கு அருகில் திரு. நாகபத்மநாதன் தலைமையில் நடைபெறுகிறது. விழாவை காலலூர் பா. உ. பண்டிதர் கா. பொ இரத்தினம் தொடக்கி வைக்கிறார். நூலை திரு. வி. பொன்னம்பலம் வெளியிட்டு வைக்கிறார். ஆய்வுரையை சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன், ஈழத்துச் சிவானந்தன், சட்டத்தரணி சு. க. மகேந்திரன் ஆகியோர் நிகழ்த்துகிறார்கள். விழாவில் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ., திருமதி அமிர்தலிங்கம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துகிறார்கள்.

### ஓர் வேண்டுகோள்!

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்திலும், அதன் சகல கிளைகளிலும் மில்க்வைற் தயாரிப்புக்கள் யாவற்றையும் பெற்றுக் கொள்ளலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

**மில்க்வைற்-யாழ்ப்பாணம்**

இப்பத்திரிகை கொழும்பு-12, 194 ஏ, பண்டாரநாயக்க வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு ஜூலை மாதம் 26-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது! அச்சுப் பதிப்பு! வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org